உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] ஸ்ரீமுக வருஷ மாசி மீ [பகுதி-௪.
Vol. XXXI. February-March 1934. No. 4.

பரிசளிப்புப் பாராட்டு.

"பாரி பாரி யென்று பலவேத்தி; ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்" என்றபடி புலவர்போற்றும் புகழுடையனான அண்ணல் பாரியை அறியாதார் அறியாதாராவர். பாரியின் சிறப்பாகப் புறநானூறு முதலிய பழந்தமிழ்நூல்களில் ஆங்காங்குக் காணப்படுமவற்றையும் தம் மதிவலியால் ஆராய்ந்து கண்டவற்றையும் ஒருங்கு தொகுத்துச் சேது ஸமஸ்தான மஹாவித்வானும் பாஷாகவிசேகரருமாகிய ஸ்ரீ. உ. ஹ. வே. ரா. இராகவையங்காரவர்கள் பாரி விஷயமாக இனிய செவ்விய வெண்பா யாப்பிற் பாரிபாட்டு என்று பெயர்புனைந்து இயற்றிய தமிழ்நூலைத் தமிழ்நாடுசெய்த தவப்பேற்றால் அப்பாரியே புலவரோடு பாவலரும் பாராட்டி நட்புக்கொள்ளத்தக்க புத்துருவெடுத்துவந்தாற்போன்று விளங்கும் மாட்சிமைபொருந்திய வள்ளல் செட்டிநாட்டரசர் டாக்டர்: ஸர்: அண்ணாமலைசெட்டியாரவர்கள் நாளிது மாசி மீ 3உ (14-2-34) புதன்கிழமை அண்ணாமலைநகரில் அண்ணாமலைசர்வகலாசங்கத் தாபகர் தினக்கொண்டாட்ட நன்னாளன்று கூடிய புலவர்பெருங்குழுவில் அரங்கேற்றச்செய்து கேட்டு, உவந்து ஓராயிரம்ரூபா பரிசளித்தது தெரிந்து மகிழ்வெய்துகிறோம்.

அரசர் அண்ணாமலைசெட்டியாரவர்கள் பல்கலைக்கழகம் நிறுவி, அதில் தமிழ்வளர்ச்சிக்குவேண்டுவனவற்றையெல்லாம் உள்ளியுள்ளி உவந்துசெய்துவருவதுடன், புலவர்பாடல்கேட்டுப் பரிசுதவமுன்வந்ததும் உலகம் வியந்து பாராட்டுதற்குரிய செயலாம்.

அரசர் அண்ணாமலைவள்ளலும் அவர் நிறுவிய பல்கலைக்கழகமும், 'இவ்வாறே மேலும் தமிழ்ப்புலவர்பெருமக்களை ஆதரித்துப் புதியனவாகப் பல அரிய பெரிய தமிழ்நூல்களை உலகுக்குதவிப் பண்டைத் தமிழரசரும் தமிழ்ச்சங்கமும் போல எல்லாநலனும் எய்திப் பல்லூழி வாழவும், புலவர்பெருமானான ஐயங்காரவர்கள் தாம் இயற்றியுள்ள பிற நூல்களையும் உலகுக்குதவிப் பல்லாண்டு சிறப்புற்றுவாழவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக. [உதவிப்பத்திராசிரியர்.]

*

ஸ்ரீ:

கடவுள் துணை.

சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிடி மண்டபத்தில்

1934ஞு பிப்ரவரிமீ 14உ (ஸ்ரீமுகஞு மாசிமீ ௨உ)

இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் மஹாவித்வானும்

பாஷா கவிசேகரருமாகிய

ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள்

தாம் பாடிய பாரிபாட்டு என்ற அரிய நூலைச்

செட்டிநாட்டு அரசர்பெருந்தகை

டாக்டர் ராஜா: ஸர். அண்ணாமலைவள்ளலார்க்கு

உரிமையாக்கி அரங்கேற்றிய திருநாளில்

சென்னை யூனிவர்ஸிடி: தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்

தலைமைப்பண்டிதர்: இராமநாதபுரம்

மு. இராகவையங்காரவர்கள் பாடிய

சிறப்புப்பாயிரம்.

1. பூம்புகார் வணிகர்குல மணிகளெனத்
தமிழ்ப்பாண்டி பொலிவுற் றோருள்
தீம்புகால் சீத்ததிருத் தில்லையினிற்
பல்லறமுந் திருத்துஞ் செல்வர்
தோம்புகாப் பெருங்குடியுட் டோற்றியவிந்
திராதிருவன் றொன்னீர் வைப்பை
ஓம்புகா ரெனவளிப்போ னொருவனுளன்
அவனையெவ ருணரா தாரே.

2. புறநாட்ட விளக்கன்றிப் புலநாட்டும்
விளக்கேயிப் புவியோர்க் குள்ள
மறநாட்டு மிருண்மாய்க்க வல்லதெனச்
சகலகலா மன்ற மென்னுந்
திறநாட்டும் ஞானமணித் தீபவொளி
தில்லைமுன்றில் திகழ வேற்றி
யறநாட்டிப் புகழ்நாட்டு மண்ணலண்ணா
மலைக்குநிகர் யாவ ரம்மா.

3. துதிபெருக்குஞ் சொல்லானே சொல்லிபமை
வதுகொல்லோ துளக்கி லாத
நிதிபெருக்கித் தோற்றமொடு நிலைபெருக்கி
நெறிபெருக்கி நீடு கங்கா
நதிபெருக்கு மானசம்போல் நாட்டியபல்
கலைமன்றுல் ஞான வெள்ளம்
மதிபெருக்கி வளஞ்சுரக்கும் வண்மையண்ணா
மலையரசின் மாட்சி மாதோ.

4. கொல்லைத்தே னசும்பகலாக் கொடைக்குன்ற
மாம்பறம்பின் குணபா லுள்ள
எல்லைக்கோர் தாநிலவு மிளங்கோநாட்
டிருங்கோமான் யாரும் ஒதத்
தில்லைக்கே சீர்நிறுத்த செம்மலண்ணா
மலைகானிற் றியங்கி வாடும்
முல்லைக்கே தேர்நிறுத்த மூரிவண்கைப்
பாரிபுகழ் முழுது மோர்ந்தே.

5. அறந்திகழுங் கொடைக்குவரம் பாகவா
னடியாரு மணிந்த வள்ளல்
மறந்திகழப் பெருவேளின் மாப்புகழைக்
காப்பியமா வகுத்தே யீகைத்

திறந்திகழுஞ் சேதுபதி திருவாயிற்
பெரும்புலவன் செந்நா வல்லோன்
சிறந்தகவி சேகரனஞ் சீராகவன்
செய்த திறமுங் கேட்டே.

6. அப்பாரி பாட்டமுதி லமைந்தசுவை
அருமையறிந் ததனைப் போற்றி
இப்பாரிற் கொண்டாடற் கியைசானரியே
னெனமுன்வந் திங்கு நாமுந்
தப்பாதச் சுவையருந்தத் தன்பெருநாள்
அரங்கேற்றஞ் சமைத்தா னிந்நா
ளொப்பாரில் நல்லறிஞர்க் குபகாரி
யிவனன்றி யொருவ ருண்டோ;

7. கலையிட்ட பெரும்புலமைக் கபிலனுக்கா
ருயிர்த்துணையாய்க் கற்றோர் நெஞ்சில்
நிலையிட்ட புகழ்ப்பாரி நெடும்பாடற்
பொருள்விரித்து நிறைந்த கல்வி
தலையிட்டோர் கபிலாவ தாரமென
ராகவன்றான் சாற்று நூலை
மலையிட்ட தீபமென வள்ளலண்ணா
மலைக்கணிந்தான் வயங்க மன்னோ.

8. மூவேந்தர் பேரய்த்தமிழின் முன்னிலைமா
றியவின்றும் முதிர்ந்த கேள்விப்
பாவேந்த ருளரவரைப் பாலிப்போர்
தாமுமுள ரென்னும் பான்மை
மாவேந்தர் பின்னவருண் மன்னவர்முன்
னோனண்ணா மலைமுன் பாரி
நாவேந்து கவியெடுத்து ராகவசிங்
கம்முழங்கி நாட்டிற் றம்மா.

9. வள்ளலார் புகழமுதை வடித்தபா
வலரவரால் வரிசை பெற்றே
எள்ளலா வாழ்வுற்று ரென்பதிறும்
பூதேயோ வின்று ளோரும்
விள்ளலா முறையவர்சீர் விளம்பலுறின்
இசைவரிசை வேண்டி யாங்குக்
கொள்ளலா மென்பதையிப் பாசிபாட்
டாங்கேற்றங் குறித்த தன்றே.

10. பூதவுடம் பேயன்றிப் புகழுடம்பைப்
பாடுநர்க்கும் பொய்யா வள்ளல்
தீதகன்ற வேள்பாரி திருப்பாடல்
அமைந்ததொரு திறமென் னென்பேம்
காதளவி நிறைந்துமனங் கரைவித்துக்
கண்ணநீர் காலச் செய்து
கோதகல என்புருமைத் துள்ளமுந்தன்
வசங்கொள்ளை கொள்வ தாமால்.

11. திருந்துகூத் துகந்தபிரான் தில்லையிற்பல்
கலைமன்றந் திகழ வண்மை
பொருந்துகோப் பாரிபுகழ் போற்றியவெண்
பாவினரங் கேற்ற நன்னாள்
இருந்துகேட் டுளமுவந்த விளவாசோ
டிதனுரிமை யேற்றெம் போல்வார்
விருந்துகூட் டுணவைத்த வேந்தனண்ணா
மலையூழி வாழி மாதோ.

சுபம்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[சசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

[அபாயம் அணுகலுற்று, அஞ்சும் நெஞ்சினராய் அடைந்தவரை அபயமளித்து ஆதரிப்பவரும் ஐம்பொறிகளை அடக்கிச் சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதி விருப்பு வெறுப்பற்றவர்களும் நற்கதியடைதல் திண்ணமாதல்போலக், கள்ளுண்டார் தீக்கதியடைதலும் திண்ணமே.]

நஞ்சும், கள்ளைப்போலக் கொல்லுமேயன்றி,
நரகத்திற்சேர்க்காதெனல்.

508. 'வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையும் களிப்பும் தாக்கும்,
கஞ்சமெல் லணங்கும் தீரும், கள்ளினால் அருந்தி னாரை:
நஞ்சமும், கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே.

இ—ள். 'வஞ்சனைபுரிதலும் களவுசெய்தலும் பொய்கூறலும் அறிவு மயங்குதலும் முறைதவறிய கொள்கைகளைக் கொள்ளலும் சரணடைந்தாரை(க்காவாமல்) தள்ளுதலும் கள்ளுண்பாரைச்சேர்ந்து வருத்துவனவாம். அவர்களை இலக்குமி விட்டகல்வாள் (அவர்கள் செல்வம் நீங்குமென்றபடி). நஞ்சும், (தன்னை உண்டாரைக் கள்ளைப்போலக்) கொல்லுவதல்லாமல், (அக்கள்ளைப்போலத் தன்னையுண்பார்க்கு) நரகத்தைத் தராது' (என்றான் சுக்கிரீவன்.)

கொல்லும் நஞ்சினும் கொடியது கள் என்பது கருத்து.

மரபு - முறைமை. கொட்பு - கொள்கை. களிப்பு - செருக்கு. தாக்குதல் மோ(திவருத்)துதல். தீர்தல் - நீங்குதல். அருந்தல் - உண்ணல். கள்ளினால் அருந்தினாரை - கள்ளை அருந்தியவரை: வேற்றுமை மயக்கம்.

சிறந்தபொருள் பொதிந்த இப்பாட்டின் இறுதியடி மிகவும் பாராட்டத்தக்கது.

[இவ்வாறு கூறிய சுக்கிரீவன், பின்னுங்கூறுவானுய்க் 'கள்ளினால் வருவது கேடேயென்று கேட்டிருந்தும் அதனை விலக்காது கெட்டேன். கள்ளை வாயால் மடுத்தல் கிடக்க, கையால் தீண்டுதல்மட்டுமோ,

கண்ணாற் காணலும் கருத்தாற் கருதலுமே தீயசெயலாம். இனிக் கொடிய கள்ளை விரும்புவேனானால், அக் கள்ளாலன்றி இராமபிரான் திருவடிகளாற் சிதைக்கப்படுவேனாக!" என்றான். பின்பு, இலக்குமணனை எதிர்கொண்டு வரவேற்குமாறு அங்கதனை ஏவித் தானும் தன் தேவிமாரும், உறவினர் சூழ அரண்மனையின் ஆசாரவாசலில் நின்றான்.

அங்கதன், இலக்குமணனை யடைந்து, திரும்பவும் தெண்டனிட்டுச் 'சுக்கிரீவமகாராசன் உன்னை வரவேற்கச் சித்தமாயிருக்கிறான்' என்றான். இலக்குமணன் சுக்கிரீவனிடம் சென்றபோது, அவன் இருமருங்கும் வெண்சாமரங்கள் துளங்க, மேலே வெண்கொற்றக்குடை விளங்க, எதிர்கொண்டுசென்று இலக்குமணனை வரவேற்றான். இலக்குமணன், சுக்கிரீவனைக் கண்டபோது, தன்மனத்தினுள்ளே சுவாலித்தெழுந்த கோபத்தீயைச் சாந்தநீரா லவித்துக்கொண்டு அரண்மனையுள்ளே சென்றான். அங்கே, சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கும்படி சுக்கிரீவன் வேண்டிக்கொண்டபோது, இலக்குமணன், 'இராமபிரான், நாட்டைத் துறந்து, காட்டை யடைந்து தரையாதனத்தி லிருக்க, நான் *அரியாதனத்தில் அமர்தல் ஆகுமோ?' என்று தரையிலிருந்தான்.

அதுகேட்டு வருந்திய சுக்கிரீவன், 'ஐய! போசனசமயமாகியது. நீராடி அமுதுசெய்க' எனத் 'துன்பமும் பழியும் நிறைந்த எங்களுக்கு இனிமையானது எதுவுமில்லை. "கருத்துவேறுற்றபின் அமிழ்தும் கைக்குமால்". அரக்கன் சீதையைக் கவர்ந்து மூட்டிய பழித்தீயால் தகிக்கப்பட்டுள்ளோம். அவனைக் காட்டினாயானால், அத்தீயையவித்து எங்களைக் கங்கைநீராட்டினா யாவாய்; தேவாமிர்தம் ஊட்டினாயுமாவாய். பச்சிலையோ கிழங்கோ, காயோ கனியோ, ஏதாயினும் எம்பிரான் உண்டுமிஞ்சிய மிச்சிலை உண்பேனன்றி வேறெதனையும் நாயின் எச்சிலெனக் கருதுவேன். நான் திரும்பிப்போய்க் கீரை முதலியவற்றைத் தேடிக் கொணர்ந்து எம்பிரானை உண்பிக்கவேண்டியிருத்தலால், இங்கே தாமதித்தல் சிறிதும் தகாது' என்றான்.

எனவே, சுக்கிரீவன், இராமனது நிலைமைக் கிரங்கி, வானாசேனையைத் திரட்டிவருமாறு அநுமானுக்குக் கட்டளையிட்டுவிட்டு இராமனிடம் செல்வானானான். இலக்குமணன் வாகனம் ஏறாநாக, அவனுடன்

* சிங்காதனத்தில்.

சுக்கிரீவன், தானும் பாதசாரியாய்த் தன் சிவிகை பின்வரச் சேனை சூழச் சென்று, இராமனிருந்த இடத்தைச் சமீபித்தபோது சேனையைப் பின்னே நிறுத்திச் சென்று, இராமனைக் கண்டு வணங்கினான். அவன், கோபம் மாறி அன்பு மீதூர, வணங்கினவனை வாரி யெடுத்து மார்புறத் தழுவிப் பக்கத்தில் இருக்கச்செய்து, 'உன் அரசும் ஆணையும் நன்கு நடக்கின்றனவே? உன் குடிகள் குறைவின்றி இனிது வாழ்கின்றனரா?' என்று சேமவிசாரணை செய்தான். சுக்கிரீவன், 'உன் கிருபையால் எக்குறையுமின்றி எல்லாம் நன்றாயிருக்கின்றன' என்று விடையளித்து, 'நீ பேரருள்புரிந்து பெரிதுசெய்த அரிய உதவியால் அரசச்செல்வமனைத்தும் அடைந்த அடியேன், உன் கட்டளையை நிறைவேற்றாமல் என் குரங்குக்குணத்தைத் திரும்பக் காட்டிவிட்டேன். சீதாதேவியைத் திசையனைத்துஞ் சென்று தேடிக்காணும சேவையைச் செய்தேனில்லை. அவள்பிரிவால் நீ வருந்தியிருக்கவும், நான் மனைவியரோடு வாழ்ந்து மகிழ்ந்திருந்து பெரும்பிழைபுரிந்தேன்' என்றான்.

இராமன், 'நீ உன்னை நோதல்வேண்டா. இதுவரையும் எந்த முயற்சியும் செய்தற் கிடங்கொடாத கார்காலம் கழியாதிருந்தது. உன் இரங்கல்வார்த்தைகள், இனிச் செய்பற்பாலதைத் தீவிரமாகச் சிரத்தையோடு செய்வாயென்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இனி, நீ குற்றஞ்செய்ததாக்கூறுத லொழிதி. அநுமான் எங்கே யிருக்கிறான்?' என, 'எண்ணிறந்த தூதர்கள், எல்லாத்திசைகளிலும் உள்ள சேனைகளைத் திரட்டிக்கொண்டுவரச் சென்றிருக்கிறார்கள். சேனைகள் வந்துசேரும் நாள் இன்றுதான். அவைகளோடு அநுமான் நாளை இங்கே வருவான். எல்லாச்சேனைகளும் வந்தவுடனே, நாம் செய்யவேண்டியதைச் சிந்தித்து முடிவுசெய்யலாம்' என்று சுக்கிரீவன் சொன்னான்.

இராமன், 'இப்போது பகற்பொழுது கழிந்தது. நீ ஊருக்குப் போய் நாளைத்தினம் சேனையுடன் திரும்பிவா' என, அவன் வணங்கிச் சென்றான். அவன் சென்றபின், இலக்குமணன், அவனிடம் தான் போனபோது நிகழ்ந்தவற்றை இராமனிடம் தெரிவித்தான்.]

கிட்கிந்தைப்படலம் முற்றிற்று.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

நரிவிருத்த ஆராய்ச்சி.

[பண்டித. இராமசுப்பிரமணியநாவலர்,

தலைமைத்தமிழாசிரியர், ஆங்கில உயர்தரப் பாடசாலை, தக்கலை.]

தோற்றுவாய்.

நாவன்மைமிக்க புலவர்கள் எஞ்ஞான்றும் உலகிடைத்தோன்றி, மக்கட்கு இன்றியமையாத நன்னெறிகளைப் புலப்படுத்துச் செல்கின்றனர். நன்னெறிகளைக் கதைகளோடு பொருத்திக்கூறுதலொன்று, அவைதம்மைத் தனித்தனி கூறுதலொன்று: என்னும் இவை யிரண்டும் அவர்களாற் றழுவப்படுமென்க. கதைகளின்வாயிலாக நெறிகளைப் புகட்டுமிடத்து, அவை, யாவருள்ளத்தும் பசுமரத்தாணிபோற் பதிவன; அஃதேயுமன்றித் தீதின்றிமையும் நல்லதன் நன்மையும் வகுத்துணர்ந்து மக்கள் நன்னெறிக்கண் ஒழுகுதற்குப் பெரிதுந் துணைபுரிவனவுமாம்.

'நரிவிருத்தம்' என்பது கதைதழுவி நன்னெறிகளைப் புலப்படுத்திவரும் ஐம்பத்திரண்டுபாடல்களையுடையதொரு சிறுநூலேனும், அது தன்னுட்கொண்டு இலங்கும் நீதிகள் மிக அருமைவாய்ந்தனவும் சிறப்புடையனவுமாம். எனினும், இந்நூலை இக்காலத்து மாணவர்கள் பெரிதும் கடைப்பிடித்துப் பயில்கின்றிலர். அங்ஙனம் பயிலாமைக்குக் காரணம், - நூல் அரிதிற் கிடைத்தல், நூலின்கட்போந்த கதைகள் பயிலாமை, நூல் அருகசமயக்கோட்பாடுடைத்தாதல் முதலியனவாம். நூல் யாரால் இயற்றப்படினும், நீதிகள் யாவர்க்கும் பொதுவாகலான், நாலடியார் சிந்தாமணி மணிமேகலை முதலிய பிறசமயநூல்களைப் பயில்வதுபோன்று இந்நூலும் பிறசமயத்தாராற் பயிலத்தக்கதாகும் என்பது அறிவுடையார்க்கு மறுதலையாகாது.

நூலாசிரியர்.

இந்த நூலாசிரியர், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி என்னும் நூலை இயற்றிய திருத்தக்கதேவர் என்பார். ஆசிரியர் காலம் கடைச்சங்ககாலத்திற்குப் பிற்பட்டதென்பர் சிலர். அது துணிந்து கூறுவதற்கு இயலாததொன்றேனும், மணிமேகலை சிலப்பதிகாரங்கட்குப் பிற்பட்டகாலத்திலேயே சீவகசிந்தாமணி இயற்றப்பட்டதென்று கருதத்தகும். திருத்தக்கதேவர் அருகசமயத்தவர் என்பது அவர் இயற்றிய சீவகசிந்தாமணியானும் செவ்விதின் விளங்குமென்க. கடவுள்வாழ்த்தானும் இடையிடைவரும் சில தொடர்களானும் அருகசமயக்கொள்கைகளும் அருகசமயக்கடவுளது பெயர்களும் ஆசிரியரால் விளக்கப்பட்டமை கண்டுகொள்க. 'சினவரன் சொன்ன நன்னூல் ஒன்றிய மனத்தராகி', 'சுடர்கோள்பூம் பிண்டிநாதன் சொல்லறந் துணிந்து', 'மேலை வல்வினை துகளற விளக்கிய விளங்கொளி மணிச் சோதிக், கோல முக்குடை யுடையவர்க் கல்லதென் கைத்தலங் குவியாதே' எனவரும் நரிவிருத்தவடிகள் ஆசிரியர் அருகசமயத்தார் என்பதை நன்கு வற்புறுத்துமாறு காண்க.

இந்நூலகத்துப் பயின்றுள்ள அருகசமயக் கொள்கைகள்.

1. தீய செய்தார் நரகராதல்:—

'நன்றியில் செய்கை தம்மால் நாரகர் தம்மோ டொப்பான்'. (1)

'நரகர்' என்னும் பெயர் இழிவினையாளர்க்கு அருகரால் வழங்கப் பெறுவது. நரகத்திற் கேதுவானவர் என்றவாறு.

2. நிலத்திற் கிடப்பின், தம் இயக்கத்தான் உயிர்க்கொலை நேருமெனக் கருதி அருகர் உறியின்மேல் இருத்தல்:—

'துன்னு தாபதன் றாங்குறி யிற்கிடந், தின்ன லெய்தினன்' (27)

3. நரகமுண்மை:—

'இறப்பவும் நரகத்திடை யெய்தினான்'

4. நல்வினையுஞற்றினவர் குருவத்திற் சேர்தல்:—

'மான வேன்மன்னன் மாதவத் தோர்க்குண்டி
தான மீயுழிச் சத்திய பாமையும்
ஊன மின்மனத் தாலுடம் பட்டனள்
ஈன மில்குரு வத்திடை யெய்தினுள்' (30)

'உத்தம குருவும் புத்தே ளுலகமு முடையர்'

5. நன்மைபுரிந்தார் இயக்க ராதல்:—

'மயக்கின் மாதவத் தார்க்குண்டி யீந்தவள்
இயக்கி யாயின ளென்பதுங் கேட்டுமால்' (31)

6. மக்கள் நாற்கதியினும் பிறத்தல்:—

'பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாகிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்
சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகி' (33)

நாற்கதியாவன, தேவர் மக்கள் விலங்கு, நரகர் என்னும் நால்வகுப்பினும் பிறப்புறுதல்.

7. உத்தமதானமீந்தார் புத்தேளுலகடைதல்:—

'உத்தம தான மீந்தே யொண்பொரு ளுவந்து நல்ல
உத்தமர்க் குவந்து முன்னே யுத்தம தான மீந்தே
உத்தம நெறிநின் றோர்க்கு முவமையொன் றில்லை யாகும்
உத்தம குருவும் புத்தே ளுலகமு முடைய ரன்றே' (40)

ஆசிரியரது உள்ளம்.

திருத்தக்கதேவர் அறத்தை வலியுறுத்தும் இவறன்மையைக் கடிந்தும் தவத்தை உயர்த்தும் கூறுகின்றமை, அவரது உள்ளம் அறமுதனெறிகளில் நிலைபெற்றமையைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றது. கொலைபுரிதல் ஊனுண்ணலாகிய குற்றங்களை ஆசிரியர் இடத்திற்கு ஏற்ப மிகக் கடிந்துரைப்பர். இதனுன், அவரது இனிய ஒழுக்கமும் அருட்பான்மையும் நன்கு மிளிர்கின்றன.

நூல்.

'நரிவிருத்தம' என்னும் இந்நூல் 'உவமைககதை நீதி நரிவிருத்தம்' என்னும் பெயரானும் வழங்கப்பெறும்; ஆசிரியர் தாம் புகலப்புக்க நீதிகளையும் சமயக்கோட்பாடுகளையும் புலப்படுத்தற்பொருட்டு ஆண்டாண்டுக் கதைகளை எடுத்தாளுதலின், இப்பெயர்த்தாயிற்றுப் போலும். இந்நூல் விருத்தப்பாக்களானுகியது.

நூல்செய்தற்குக் காரணம்.

ஆசிரியர் இந்நூல்செய்தற்கு ஒரு காரணம் கூறுவாருமுளர். அஃதாவது, "திருத்தக்கதேவர் சீவகனதுசரிதத்தைப் பெருங்காப்பியமாகப் பாடுதற்கெண்ணித் தம்மாசிரியரிடத்துத் தமது எண்ணத்தை எடுத்துரைப்ப, அவர் தேவரது வன்மையை ஆயும்பொருட்டு அப்பொழ்து தம் காட்சியிற்பட ஓடிய ஒரு நரியைச் சுட்டிக்காட்டி, 'இவ்விலங்கைக்குறித்து நின்கருத்துக்கு இயைந்தவாறு ஒருகதை புனைக' எனக் கூறினர். தேவரும், உடனே, பல நீதிகளும் அருகசமயக்கோட்பாடுகளும் அமைய 'நரிவிருத்தம்' என்னும் இந்நூலைப் பாடினர்" என்ப தாம். நரிவிருத்தத்திற் கூறப்பெறும் நரியின்கதை முன்னரே வழங்கி வருவதாகக் கோடற்குச் சில சான்றுகள் காணப்படுகின்றமையின், தேவர் இக்கதையைக் கற்பித்தாரெனல் சாலாது. அன்றியும், தேவர் இந்நூலிற் பலவிடங்களிலும் எடுத்துக்காட்டுகின்ற கதைகளும் அவர் காலத்துக்குமுன்னரே வழங்கின என்பதற்கு அகச்சான்றுகளே யமையும். அக்கதைகளை விரித்துக்கூறுமற் சுட்டிச்செல்வதனுல் அவை முன்னரே வழக்கில் இருந்திருத்தல்வேண்டுமென்பது தெளியப்படும். 'மெய்ப்பொரு டேறலன் பற்றுள மேபுரிந், திப்பை யாக்கையிற் றேர்ச்சியில் வாணிகன், கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை, ஒப்ப நூலுணர்ந் தார் சோலக் கேட்டுமோல்', 'தாடிவெண்ணெய் தனதுரை கேட்டுமோல்,' 'இயக்கியாயின ளென்பதுங் கேட்டுமோல்' எனத் தாம் கூறப்புக்க கதைகளைத் தாமே முன்னர்க் கேட்டுள்ளமையை ஆசிரியர் தெரிக்கின்றது

நோக்க, நரியின்வரலாறும் தாம் கேட்டதாகவே கொள்ளுதல் கூடும். மேலும், பிறஇடங்களில், 'எனப் பெரியோர் கூறுவர்' என்னும் பொருளில் 'என்ப' என்னும் வாய்பாட்டாற் சிலகதைகளை எடுத்துக்காட்டுவதும் இதற்குச் சான்றுமெனக.

'நரிவிருத்தம்' என்பது 'நரியின்வரலாறு' என்று பொருள்படும். 'விருத்தம்' என்பது 'செய்கை' எனப் பொருள்படும் வடசொல்.

கதைச்சுருக்கம்.

ஒரு வேடன், கானகத்தின்கண்ணே தினையை அழித்த ஒரு யானையின் நெற்றியிற் கணைதொடுப்ப, அவ்யானை அவன் நின்ற புற்றின் மீது பாய்ந்து, வீழ்ந்து, இறந்தது. புற்று, அதிர்தலான், அதன்கண் இருந்த பாம்பு வேடனைக் கடித்தது. வேடனும் வாளை உருவி அப் பாந்தளை வெட்டி, விடமேறித் தானும் இறந்தனன். இதனைப் பசியான் வாடி உழலும் ஒரு நரி கண்டு, "களிறு அறுதிங்கட்காகும்; கானவனும் ஏழ்நாள்; நாகம் இற்றைநாட்கு இரையாயிற்று; இப்போழ்தைய உணவிற்கு வேடன் கைவில்லின் தோற்கயிற்றை (நாணை)த் தின்பல்" என்று கருதி, நாணின் குதையைக் கௌவி அறுத்தது. அறுப்பவே, விற்றண்டு நிமிர்ந்து, தன் வாயிற் கோத்துக் கொள்ளவே நரியும் இறந்தது—என்பது நூலிற் போந்த கதை.

நரியின்வரலாறு எழுசெய்யுட்களான் முடிக்கப்பட்டுள்ளது. அப்பால், நூலிற் கூறப்படுவன நன்னெறிகளும் அவற்றை வற்புறுத்துக் காட்டும் கதைகளுமேயாம். அக்கதைகளுள்ளும் பெரும்பாலன சைன மதம்பற்றியனவே. இதனுள், இருபதுகதைகள், சிறந்தன உள. அவற்றிடையே, இவறன்மையைக்குறித்து உரைக்குமிடத்து, ஒரு பாடலில், மகாபாரதக் கதை சுட்டப்பட்டுள்ளது. அதில் 'துரியோதனன் பாண்டவரைவர்க்கும் அவரது தாயபாகத்தைக் கொடாமையால், தன் கிளையோடு தானும் இறந்தொழிந்தான்' என்னும் கருத்து அமைந்து கிடக்கின்றது. அப்பாடல் வருமாறு:—

"அஞ்சு மின்னதி லோபமில் லோர்களுஞ்
செஞ்சு டர்நெடு வேற்றிரி யோதனன்
பஞ்ச வர்க்குமண் பாகங்கொ டாமலே
தஞ்சி னுன்கிளை தன்னொடு மென்பவே" (21)

பலகதைகள் கூறப்பெறினும், அவையெல்லாம் ஆசிரியர் தாம் புகல எடுத்துக்கொண்ட நரிவிருத்தத்தை யடியொற்றிவருதலின், 'நரிவிருத்தம்' என்னும் பெயர் இதற்கு இயைபுடைத்தாயிற்று என்க. அன்றியும், அப்பெயரமைதியை விளக்கக் கடைபோக்குதற்பொருட்டு ஆசிரியர், 'செத்தவிந் நரியைப் போலச் செய்பொருளீட்டுவார்கள்' எனவும், 'சுற்றினுர் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி னரியைப் போலப் பற்றினுர்' எனவும், 'தேர்ச்சியிலா நரிவிருத்தம் கேட்டலும்' எனவும், 'மாட்சியிலா நரி உற்ற கோட்டிறத்தினை' எனவும் இடையிடையே நரிவிருத்தவமைதியைச் சுட்டிச் செல்கின்றமையும் ஆயற்பாலது என்க.

நீதிநெறிகள்.

இச் சிறுநூலிடை ஆசிரியர் எடுத்துக்காட்டும் நீதிகள்தாம் பல. அவற்றை நோக்குழி இதனை ஓர் நீதிநூல் என்று கூறுதல் வழுவெனப்படாது. இதனுட் போந்த நீதிகளுள் ஒரு சில ஈண்டுக் காட்டப்படும்.

அறம்.

அறத்தை ஆசிரியர் பலவிடங்களிலும் திறம்பட உரைத்துளர். யாவரும் மேற்கொண்டு ஒழுகப்பெறுவது அறமே எனவும் அதனைச் செய்யாதார் தேர்ச்சியில்லாதவர் எனவும் கூறுவர். 'சித்தம்வைத் தறங்கள் செய்யார் தேர்ச்சியின் மாக்க ளந்தோ' (8) என ஆசிரியர் இரங்கியுரைத்தல் காண்க. அறஞ்செய்வார் அறிவுடையர் எனவும் அல்லாதார் கடைய ரெனவும் அறத்தின்மிக்கது பிறிதுயாதுமின்று எனவும் ஆசிரியர் கூறுவன மிக்க நயமுடையன.

'உண்டலோ டுறங்க லச்ச மிணைதலு மொருங்கு நாடின்
மண்டிணி யுலகின் வாழு மாக்களும் விலங்கு மொப்பாம்
கண்டதொன் றுண்டு நல்ல வறங்கடைப் பிடித்த நீரார்
பண்டித ரேனை மாக்கள் பசுவினுங் கடைய ரன்றே' (12)

'அளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை' (14) என்பதனை,

'அறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு' (திருக்குறள்—4—1.)

'அறத்தினூங் காக்கமு மில்லை' (ஷை—4—2)

என்பவற்றோடு ஒப்பிட்டு நோக்குக,

'ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினும்
ஆக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்
நீக்கி நல்லறம் நிற்ப நிலாவிடிற்
றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே' (46) என்பதை,

'ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்' (திருக்குறள்—4—3.)

என்பதனோடு ஒப்பிட்டுக் காண்க.

'ஆக்குவ தேதெனி லறத்தை யாக்குவ' (50) என்பதனால் அறமே தலைசிறந்தது என்பது அறியப்படும். திருவள்ளுவனாரும், அறமே தலைசிறந்தது என்பதனைச் 'செயற்பால தோரு மறனே' (திருக்குறள்—4—10) எனத் தெளிவுபட அருளியது ஈண்டுக் கருதற்பாலதாம்.

இதுகாறும் கூறியது ஒவ்வொருவரும் செயற்பாலதாய நல்வினைப் பொருட்டாகும் அறமாமென்க.

ஈகை.

இனி மக்கட்கு உறுதிதருவன பகுத்துண்டுவாழ்தலாகிய தானமும் தவமுமாமென, ஆசிரியர்:

'ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க் குறுதி நாடின்
ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா நிற்ப மண்மேல்

பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்ற லொன்றே' (34)

என்னுஞ் செய்யுளிற் றெரிக்கின்றனர். தானமும் தவமும் சிறந்தனவாம் என்பது திருக்குறளில், 'தானந் தவ மிரண்டும்' (2—9.) என அவை இரண்டனையும் உடங்குவைத்துக்கூறுதலானும் பெறப்படும்.

'ஈகைநற் றான மீந்தா ரிணையிலாக் குருவின் மிக்க
போகத்தைக் கொடுத்துப் புத்தே ளுலகமுங் கொடுத்து மண்மேல்
ஏகால் இன்ப மாக்கி யிறைவனற் காட்சி யீயும்' (36)

என்பதூஉம் ஈண்டுக் கருதற்பாலது.

பற்றுள்ளம் கடிதல்.

"சுற்றினர் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி னரியைப் போலப்
பற்றினர் பெரிதும் வெளவிப் பகுத்துண தீட்டி னார்கள்
மற்றுண வெறுக்கை தன்னை மன்னரும் பிறரும் வௌவத்
தெற்றென வெளிறு நீரார் செல்வமு மிழப்ப ரன்றே"

என்பதனுள், பற்றுள்ளமுற்றுப் பொருளை வழங்காதார் அதனை இழப்பர் என்பது வற்புறுத்தப்பட்டது காண்க. இதனை, 'கொடாஅது வைத் தீட்டினா ரிழப்பர்' என்பதனோடு ஒப்பிடுக.

"நாட்டினு மூரைக்கப் பட்ட முழைநரி யனைய நீரார்
ஈட்டிய பொருள்க டம்மை ஈதலுந் துய்த்த லூனும்
மாட்டில ரகழ்ந்து பார்க்கீழ் நிலங்கொள வைப்பர் மாதோ
பாட்டரு மக்கள் யாக்கைப் பயன்கொளாக் கழிப்ப ரன்றே"

என்பதனொடு,

"உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்"

என்னும் நாலடியையும்,

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்"

என்னும் திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்குக.

"பற்றுள மென்னுேர் பாவை பாவமும் பழியு மாக்கிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்
சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகிக்
கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன ரதனை யன்றே" (33)

என்பதனோடு,

"பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று"

என்னும் திருக்குறளை ஒப்பிடல் அமையும்.

"மற்றி மண்மிசைப் பற்றுளத் தாற்கினை
உற்ற மாந்தர் உரைபல ஒண்மையால்
குற்ற மாய்க்கொண் டேலோபெனும் பாவியைக்
கற்ற மாந்தர் கடிந்தன ரென்பவே" (49)

என்பது இவறன்மை பாவியெனவும், அதனைக் கற்றமாந்தர் கடிந்தன ரெனவும் கூறுதலால், கல்லாதாரும் பாவியருமே அதனை மேற்கொள்வர் என்னும் பொருளை வற்புறுத்தார் ஆசிரியர் என்க.

நிலையாமை.

சைநசமயத்தார் இளமை, வனப்பு இன்பம், செல்வமுதலிய நிலையா எனவும், எனவே துறவே மேற்கொள்ளத்தக்கது எனவும் வித ந்து எடுத்துக்கூறுவர். நாலடியாரில் யாக்கைநிலையாமை செல்வநிலையா மை முதலியவற்றிற்குத் தனித்தனி அதிகாரங்கள் வகுக்கப்பெற்றமை ஈண்டுக் கருதத்தக்கது. திருக்குறளில் 'நிலையாமை' என்னும் அதி காரத்தில், பொருள்களின் நிலையாமையைப் பொதுவுறக்கூறியிருத்த லும் கருதற்பாற்று.

"இளமையும் வனப்பு நில்லா வின்பமு நின்ற வல்ல
வளமையும் வலிது நில்லா வாழ்வுநா ணின்ற வல்ல
களமக ணேச நில்லா கைப்பொருள் கள்வர் கொள்வார்" (14)

"நின்றன வல்ல வாணு ணிதியமு நின்ற வல்ல" (15)

"மேகத்து மின்னே டொக்கும் விழுச்செல்வ மதிக்க வேண்டா" (36)

என்பன ஈண்டுக் காணத்தக்கன.

தவம்.

'தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்றல் ஒன்றே' (34) என்பது தவத்தின் சிறப்பை இனிதுவிளக்கும். 'தவமுந் தவமுடையார்க் காகும்' என்னும் திருக்குறளை இவ்வடி நினைப்பிக்கின்றது.

'புள்ளுறைந் தினிது நீண்ட தவவனம் புரிந்து போகி
எள்ளற நோற்றல் செய்யா ரிடும்பைநோய்க் கிரைக ளாவார்' (43)

என்பதனுள், தவஞ்செய்யாதார்க்குப் பிறவித்துன்பமே பயனுமென்பது வற்புறுத்தப்பட்டது.

ஊனுண்ணுமை.

'ஊனுடை யுண்டியுண், டிறப்பவும் நரகத்திடை எய்தினன்' (29) என்பதனுல், ஊனுண்ணுதல் நரகத்திற்கு ஏதுவாமென ஆசிரியர் தெரித்தமை காண்க. 'ஊனுண்ண அண்ணுத்தல் செய்யா தளறு' என்னுந் திருக்குறட்டொடர் இதனெடு ஒருபொருட்டாய் மிளிர்கின்றது. "கொன்றபி னூன்றடி மேற லோம்புமின்" (44) என்பதூஉங் காண்க.

கோல்லாமைமுதலியன.

'கோறலோம்புமின்' (44), 'ஒட்டியின்னுயிர் கோறல்...விட்டு நீங்குமின் கற்றறிந்தீரெலாம்' (45) என்பவற்ருல் கொல்லாமையையும், 'பிறர்மனை விட்டுநீங்குமின்' (45) என்பதனுல் பிறர்மனைநயவாமையையும், 'போக்குவதேதெனில் வெகுளிபோக்குவ' (50) என்பதனுல் வெகுளாமையையும், 'நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குவ' (50) என்பதனுல் ஞானத்தையும், 'காக்குவதேதெனில் விரதங் காப்பவே' (50) என்பதனுல்

விரதத்தையும், 'தீயவையாவையுங் கூறலோம்புமின்' (44) என்பதனல் கொடுஞ்சொற் கூருமையையும் ஆசிரியர் வற்புறீஇயினமை காண்க.

இவையன்றிப் பிறவும் கூறப்பட்டுள்ளனவேனும், விரிவஞ்சி விடப்பட்டன.

கதைகள்.

தாம் உரைக்கப்புக்க நீதிகளை நிறுவுதற்பொருட்டு ஆசிரியர் இந்நூலில் எடுத்தாளும் கதைகள் பலவும் அருகசமயச்சார்புடையன. இவறன்மை தீது என்பதை வற்புறுத்துமிடத்துச் 'செஞ்சுடர் நெடு வேற்றிரியோதனன்—பஞ்சவர்க்கு மண் பாகம் கோடாமலே—துஞ்சினுன் கிளை தன்னெடு மேன்பவே' எனத் துரியோதனன் இவறன்மையால் பாண்டவர்க்கு நாடுகொடாமை சுட்டப்பட்டது. இந்நூலுக்குத் தொல்லையுரையகப்படாமையால், சுட்டப்பட்ட கதைகளைச் செவ்விதின் அறிதற்கு இடனின்றேனும், ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் அடிக்குறிப்பு எழுதிச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிட்டிருப்பது பேருதவியாகும்.

இந்நூலிற் சுட்டப்பெறும் வரலாறுகள் சில சீவசம்போதனை, கதாகோசம், சிராவகாசாரம், இரத்தின கரண்டகம், புண்ணியாசிரவ கதை, தர்மதேவதை கதை, யசோதரகாவியம், ஸ்ரீபுராணம் முதலிய நூல்களினின்றும் அறியற்பாலன.

நூனடை.

இசைபாய சீவகசிந்தாமணி என்னும் காவியமணியைப் பயின்றூர்க்கு இந்நூனடையைக் குறித்துத் தெரிக்கவேண்டுவது ஒன்றும் இன்றும். சொற்செறிவும் பொருட்பொலிவும் அமைந்தொழுகும் சீவக சிந்தாமணியோடு இந்நரிவிருத்தமும் நடையில் பெரும்பாலும் ஒத்து மிளிர்கின்றது. இந்நூலிற்காணும் சொல், இலக்கணவமைதி, பொருளமைதி முறை, அணியமைதி முதலியவற்றைச் சிந்தாமணியோடு ஒப்புக்கரணின், இதனையும் ஓர் சிறு சிந்தாமணி யென்னலாமாறு இந்நூல் விளங்குகின்றது.

நடை பொதுப்படத் தெளிவும் எளிமையும்பட்டுக் கிடப்பினும், இடையிடை எடுத்துக்காட்டப்பெறும் கதைகளை யுணராவிடில் பொருள் இனிது காண்டல் அரிது.

மேற்கோள்.

இந்நூலில் திருக்குறட் சொற்பொருள்களின் அமைதியும் நடையமைதியும் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன. நாலடியாரின் நறுமணமும் இடையிடை வீசுகின்றது. பற்றுள்ளம், இவறன்மை முதலிய சொற்கள் திருக்குறட் சொற்கள். 'நாடி நடோறும்' (28) என்பதனொடு 'நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன், நாடொறு நாடு கெடும்' என்னுந் திருக்குறணடையை ஒப்பிடுக. 'சுற்றத்தாற் சுற்றப் பட வொழுகல்' என்னுந் திருக்குறளடியின் பொருளையும் சொன்னடையையும் 'சுற்றத்தார் சுற்ற வாழ்தல்' (37) என்னும் தொடர் நினைப்பிக்கின்றதன்றோ? 'வரைத்த நாளன்றி வாழ்பவ ரின்மையால்' (48) என்னுந்தொடரும் 'இழைத்தநா ளெல்லை யிகவா' என்னும் நாலடியாரும் நடையினும் பொருளினும் ஒத்துத் தோன்றுதல் காண்க.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஸ்ரீரமணசந்நிதிமுறை:— இஃது அருட்பெருஞ் செல்வராய்த் திருவண்ணாமலையிற்றிகழும் ஸ்ரீரமணதேவரின் தோத்திரரூபமாய் அமைந்தது; மணிவாசகப்பெருமானுடைய திருவாசகத்தைப்பெரிதும் தழுவியது; ஆகலின் அன்பர்கள் இதனையும் ஒரு குட்டித் திருவாசக மென்று கொண்டாடுகின்றனர். இதன் செய்யுணடை மிகத் தூய்மை யும் தெளிவும் நிறைந்தது; யாவரையும் பக்திபாவசமாகச்செய்வது. இதனைஇயற்றிய ஸ்ரீமத் பாரத்வாஜமுகவைக் கண்ண முருகனார் என் பவர் ஸ்ரீரமணருடைய திருவருட்பேற்றுக் கிலக்காய்ப் பிறவியறுவோர்க் கும் பெரியாருள் ஒருவர். இந்நூல் 1413 செய்யுட்கள் கொண்டது. இதற்கு ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள் சிறப்புப்பாயிரமும், ஸ்ரீ. வ. சு. செங்கல்வராயபிள்ளையவர்கள் எம். ஏ. முகவுரையும் அளித் துள்ளனர். விலைரூபா—1—0—0. கிடைக்குமிடம்: "ஸ்ரீரமணாசிரமம், 2/28, மூக்கர்நல்லமுத்துத்தெரு, சென்னை G. T."

திருக்குறட் குமரேசவெண்பா (மூலமும் உரையும்):— இது, தூத் துக்குடி. திரு. ஜெகவீரபாண்டியன் அவர்கள் இயற்றியது. பலபகுதிக ளாக நீண்டகாலமாய் வெளிவருவது. இதுகாறும் 10-ம் தொகுதியின் 3-ம் புத்தகம்வரை அச்சாகியுள்ளன. இப்பொழுது திருக்குறளின் காமத்துப்பால் நடைபெறுகின்றது. இந்நூலின் வெண்பாக்கள் திறமை யாக இயற்றப்பெற்றவை. அவற்றிற்கு விரிவுரையும் மிகத்திருத்தமாகப் படிப்போர்க்கு இன்பம்பயக்குமாறு எழுதப்பட்டுள்ளது. இதன் வருடச் சந்தா ரூ. 4-0-0. மற்றும் விலை முதலிய விவரங்களுக்கு, "மானேஜர், திருவள்ளுவர்நிலயம், தூத்துக்குடி" என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்க.

பரணர்:— இப்புத்தகம், (சென்னைச் சருவகலாசாலை ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் தமிழ் ஜூனியர் லெக்சரர்) வித்வான் வே. வேங்கடராஜுலுரெட்டியாரவர்களால் எழுதப்பட்டது. இதில் பரணரைப்பற்றிய புராணவரலாறுகளைத் தொகுத்துச் சங்கஇலக்கியச் சான்றுகளையும் ஆசிரியர் ஆராய்ந்திருக்கிறார். பரணராற்பாடப்பட்டோர் வரலாறுகளைச் சேர்த்திருக்கிறார்; பரணர்பெயரால் வழங்கப்படும் நூல்களில் அவர் இயற்றுதனவற்றைத் தெரிந்து கூறியுள்ளார்; பரணர் செய்யுட்களிற் பயிலும் ஊர், விலங்கு, பறவை முதலியவற்றின் பெயர்களையும் பிறசெய்திகளையும் அகராதிமுறையில் அமைத்திருக்கின்றார்; அக்காலவொழுக்க வழக்கங்களை உரைத்திருக்கிறார்; மற்றும் சில சொற்பொருளாராய்ச்சி இலக்கண முடிவு இவற்றைக் குறித்துத் தம் அபிப்பிராயங்களையும் வெளியிட்டுள்ளார்; இறுதியாக நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல் என்னும் இவற்றிற் றனித்தனி காணும் பரணர்பாட்டுக்களையெல்லாம் ஒருசேர அச்சிட்டும் இருக்கிறார். இவ்வாறு மிக விரிவாக இயற்றப்பெற்றதாய்ச் சருவகலா சங்கத்தின் வெளியீடாகவும் உள்ள இப்புத்தகம் பரணரைக்குறித்து அறியவேண்டுவனவெல்லாம் எளிதினறிவார்க்குச் சிறந்த கருவியாகும் இதன் விலை ரூ. 2-8-0.

தமிழ்ப்பேரகராதி:— இது சென்னைச் சருவகலாசங்கத்தால் நீண்டகாலமாய் வெளியிடப்பெற்றுவருவது. இதன் 5-ம் தொகுதியின் 2, 3, 4-ம் பகுதிகள் இப்பொழுது அச்சாகியுள்ளன. அவற்றில் முறையே, பு-பே, பே-ம, ம-மீ வரையுள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் பொருள் தக்க மேற்கோளுடன் விளக்கப்பட்டுள்ளன. இவ்வகராதிவேலை வழக்கப்படி நன்கு நிறைவேறிவருதல் மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது. மேற்குறித்த மூன்றுபுத்தகங்களில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விலைரூ.2-0-0. கிடைக்குமிடம்:-The Madras Law Journal Office, Post Box 604, Mylapore, Madras.

குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழ்:— இது, கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றியது. சொற்பொருள்வளம்படைத்தது. பழமை பெருமைகளோடு ஒப்புயர்வின்றிவிளங்குவது. சரிதவாராய்ச்சிக்குப் பயனளிக்கும் பல குறிப்புக்கள் இதிற் காணப்படுகின்றன. விக்கிரம சோழன்மகனாகிய இரண்டாங்குலோத்துங்கனே இதன் பாட்டுடைத் தலைவனாவன். திருவையாற்று அரசினர்கல்லூரித் தமிழ்விரிவுரை யாளர் திரு. L. உலகநாதபிள்ளையவர்கள் இதனைச் செவ்வனம் பரிசோதித்து அச்சிடச்செய்துள்ளார்கள். செல்லுக் கிரையாகும்நிலையிற் சிதைந்திருந்த ஏடு ஒன்றே இதற்கு மூலப்பிரதியாக அமைந்ததென்று தெரிகிறது. ஆகையால் இதனை வெளியிட்டஉபகாரம் பாராட்டற் குரியதே. இதன் விலை அணா 8. கிடைக்குமிடம்: "சதாசிவன்பிரதர்ஸ், மயிலாப்பூர், சென்னை"

ஈசுவர ராச்சிய பரிபாலனப் பிரபாவம்:— இது, ஸ்வீடன்பர்க் சுவாமியாரால் லத்தீன்பாஷையில் இயற்றப்பட்டிருந்ததை அடியொற்றி, நியூசிபார்மர் பத்திராதிபராயிருந்த ஸ்ரீமத் D. கோபாலசெட்டியாரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. ஈசுவர கிருத்தியங்களையும் மனிதர்களின்கடமைகளையும் விரிவாயறியவிரும்பும் ஆஸ்திக புத்தியுடையவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. இது, சுத்தாத்துவைத சைவசித்தாந்தக்கொள்கைகளைத் தழுவியிருப்பதாக இதன் மொழி பெயர்ப்பாளராற் போற்றப்படுகிறது. கடவுளைநம்பிய சமயங்களின் கொள்கைகள் பலவும் இதனுட் காணப்படும். இதன் மொழிபெயர்ப்பாளரது ஆன்மஞானப்பயிற்சி பாராட்டத்தக்கது. 606 பக்கங்களுள்ள இதன் விலைரூ. 1–8–0. கிடைக்குமிடம்:—D. கோபால்செட்டியாரவர்கள், ராயப்பேட்டை, சென்னை.

சுந்தரமூர்த்திநாயனர்:— இது, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் நூல்களின் ஆசிரியராகிய தமிழறிஞர் திருவாளர் சே. சிவஞானம்பிள்ளையவர்களால் எழுதப்பட்டது. சுந்தரமூர்த்திநாயனர் சரித்திரம்படிக்கும் மாணவர்களுக்கு இனிது விளங்கும்படி வேண்டிய ஆதாரவுகளுடன் எளிய தமிழ்நடையில் வரையப்பட்டிருக்கிறது. படிப்பவர்கள் அறியவேண்டிய விஷயங்கள் பலவும் புலனுகும்படி ஆராய்ச்சிக் குறிப்புக்கள் மிகவும் விரிவாகவே எழுதப்பட்டுள்ளன. இதன்விலை ரூ. 1–2–0. கிடைக்குமிடம்:— ஸி. குமாரசாமிநாயுடுஸன்ஸ், புத்தக வர்த்தகம், சென்னை.

திருவிளையாடற் சரணமஞ்சரி:—இது, மதுரைமாநகரிற் கோயில் கொண்டுவிளங்கும் சோமசுந்தரப்பெருமான் புரிந்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடலையும் அனுதினமும் சிந்தித்து வந்தித்துப் பூசைபுரிவார்க்குத் திருவிளையாடற்புராணம் முதலியவை நாடோறும் முழுதும் படித்துமுடித்தற்கு அரியவையாயிருத்தலின் எளிதிற் பாராயணஞ்செய்தற் குபயோகமாம்படி பள்ளத்தூர்த் திருவாளர் அ. மு. ப. அ. மு. முருகப்பசெட்டியாரவர்களால் இனிமையும் தெளிவும் சுருக்கமும் அமைந்த அகவற்பாவாக இயற்றப்பட்டது. திருவாளர் பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முதலிய புலவர்கள் அளித்த சாற்றுக்கவிகளுடன் திருத்தமாகவும் அழகாகவும் அச்சிடப்பட்டது. இதனை யியற்றிய செட்டியாரவர்கள் சொற்பணிபுரியுமாற்றலும் உடையராயிருப்பது பாராட்டத்தக்கது. வேண்டுவோர் ஒன்றரையணுத் தபால்தலையனுப்பிப் பெறலாம். கிடைக்குமிடம்:—அ. மு. ப. அ. மு. முருகப்பசெட்டியாரவர்கள், நடனவிலாஸம், பள்ளத்தூர்.